பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

24 08 2026 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பாதுகாப்பு உத்திகள் குறித்த தேசிய மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- நவீன தொழில்நுட்பங்களில் திறன்மேம்பாட்டை ஊக்குவிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் மருத்துவக் கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் கூறியுள்ளார்.
- நீலகிரி, கோவை ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- Kanizsa ஓபன் செஸ் போட்டியில் இந்தியாவின் பிரனேஷ் பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பாதுகாப்பு உத்திகள் குறித்த தேசிய மாநாட்டை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் நாடு முழுவதிலும் இருந்து பாதுகாப்புப் படை மற்றும் காவல்துறையைச் சேர்ந்த 850க்கும் மேற்பட்ட அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர்.

நேரடியாகவும், காணொலி வாயிலாகவும் நடைபெறும் இந்த மாநாட்டில், தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்தும், சவால்களை முறியடிப்பது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

<<<<>>>>

கப்பல் கட்டும் முனையமாக உருவெடுக்கும் திறனை இந்தியா கொண்டிருப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று *GRSE* மற்றும் *YIL* நிறுவனங்களின் விரிவாக்கத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், கப்பல் கட்டும் துறையில் விரைவான வேகத்தில் மாற்றங்கள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

போர் கப்பல்களை உருவாக்குவதில் சுயசார்பினை எட்ட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற பிரிக்ஸ் அமைப்பின் விளையாட்டுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

விளையாட்டு உபகரணங்கள் உற்பத்திக்கும் மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ், பிரிக்ஸ் நாடுகள் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான விளையாட்டுத்துறை ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்திற்கு பின்னர், இதுதொடர்பான கூட்டு பிரகடனமும் வெளியிடப்பட்டது.

<<<<>>>>

நவீன தொழில்நுட்பங்களில் திறன்மேம்பாட்டை ஊக்குவிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் செயற்கை நுண்ணறிவு மற்றும் *Cloud Computing* தொடர்பான பயிற்சித் திட்டத்தை புதுதில்லியில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

இந்தப் பயிற்சித் திட்டம், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் உள்ள இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொடர்பான பயிற்சியை வழங்கும் என்று அமைச்சர் கூறினார்.

இதன் மூலம் ஒன்றரை லட்சம் பேர் பயனடைவார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற பயிற்சித் திட்டங்கள் எதிர்காலத்திற்கு ஏற்ற திறன் வாய்ந்த பணியாளர் கட்டமைப்பை உருவாக்க உதவும் என்று அவர் குறிப்பிட்டார்.

புதுமைக் கண்டுபிடிப்பு, நவீன தொழில்நுட்பம் ஆகியவற்றின் பலன்கள் பெருநகரங்களை மட்டுமே சென்றடையாமல், கிராமங்களையும் சென்றடைய வேண்டியது அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திரு. ஜெயந்த் சௌத்ரி குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் மருத்துவக் கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே பிள்ளாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

அந்த மருத்துவமனையில் செயல்பட்டு வரும் அனைத்து பிரிவுகளையும் பார்வையிட்ட அவர், சிகிச்சைகள் குறித்தும், நோயாளிகளுக்கான வசதிகள் குறித்தும் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

மருத்துவமனையில் வசதிகளை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

நீலகிரி, கோவை ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், சேலம், மதுரை, திருப்பூர் ஆகிய

மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

சென்னை நகரில் நேற்றிரவு பல்வேறு இடங்களில் கனமழை பெய்தது.

செங்கல்பட்டு, அரியலூர், நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்தது.

திருவள்ளூர் மாவட்டத்திலும் நேற்றிரவு பல இடங்களில் மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தருமபுரி மாவட்டத்தில் நேற்று பகலில் வெயில் அதிகம் காணப்பட்ட நிலையில், மாலை கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் முதுமலை யானைகள் முகாமில் யானைகளைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விடுமுறை நாளான நேற்று இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துக் காணப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

## இருவரிச் செய்திகள்

ஜப்பானில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 37 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

யுக்ரைன் செலுத்திய 250 ட்ரோன்களை ஒரேநாளில் சுட்டுவீழ்த்தி இருப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ஆந்திராவில் வேளாண்துறை சார்ந்த நிகழ்ச்சியில் பங்கேற்று புதிய விதை ரகம் ஒன்றை வெளியிடுகிறார்.*

<<<<>>>>

*இந்திய கடற்படையின் போர்க் கப்பலான INS Sudharshini உலகளாவிய கடற் பயணத்தின் ஒரு பகுதியாக போர்ச்சுகல் சென்றடைந்துள்ளது.*

<<<<>>>>

*தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் 33வது நிறுவன தினம் புதுதில்லியில் நேற்று கொண்டாடப்பட்டது.*

<<<<>>>>

*திருப்பரங்குன்றம் பகுதியில் மூத்தான்குளம் கிராமத்திற்கு புதிய பேருந்து சேவையை மாநில அமைச்சர் திரு. நிர்மல் குமார் தொடங்கி வைத்தார்.*

<<<<>>>>

*தர நிர்ணய அமைப்பின் சார்பில் சென்னை அண்ணா நகரில் குடியிருப்போர் நலச் சங்கத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.*

<<<<>>>>

*Kanizsa ஓபன் செஸ் போட்டியில் இந்தியாவின் பிரனேஷ் பட்டம் வென்றார்.*

*ஹங்கேரியில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதிச் சுற்றில் அவர் ஜெர்மனியின் Vadim Petrovskiy-யை வென்றார்.*

*9 சுற்றுகளில் மொத்தம் 7 புள்ளிகளுடன் முதலிடம் பெற்று அவர் பட்டத்தைக் கைப்பற்றினார்.*

<<<<>>>>